**31.10.2018 அ.வ.எண்.148/2008 வா.சா.1 கிரேசி, க/பெ.குமார்**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டார். தாவா சொத்திற்கான பட்டா தற்போது சதீஷ் என்பவர் பெயரில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. எனது பெயரில் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் 1ம் பிரதிவாதியின் பெயரில் முருகன் என்று சொன்னால் சரிதான். மேற்சொன்ன முருகன் கிரையம் வாங்கிய சொத்து தாவா சொத்திற்கு தாவா சொத்திற்கு அருகிலேயே உள்ளது என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கு சொத்திற்கும், 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்திற்கும் சேர்ந்தார்போல் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சத்யா என்பவரை எனக்கு தெரியும். அவர் இந்த வழக்கு சொத்திற்கு பக்கத்தில்தான் குடியிருந்து வருகிறார் என்று சொன்னால் சரிதான்.

2. வழக்கு சொத்தை கண்ணன் என்பவரே கிரையம் பெற்று பின்னிட்டு விற்பனை செய்த பிறகு அவரின் வாரிசுகள் வழக்க தாக்கல் செய்யமுடியுமா என்றால் கண்ணன் விற்பனை செய்யவே இல்லை. என்னிடம் காட்டப்படும் வா.த.சா.1 ஆவணம் கண்ணன் கிரையம் பெற்ற ஆவணம் என்று சொன்னால் சரிதான். மேற்சொன்ன கண்ணனே தான் கிரையம் பெற்ற சொத்தினை 06.10.1983ல் கிரையம் செய்துவிட்டார் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்சொன்ன 06.10.1983ல் கிரையம் பெற்ற சங்கரன் சொத்தினை 2ம் பிரதிவாதிக்கு 26.08.1999ல் விற்பனை செய்துவிட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்சொன்ன 2ம் பிரதிவாதி மாயாவதி தன் மகனான 3ம் பிரதிவாதிக்கு கடந்த 09.09.2004ல் ஒரு தான் செட்டில்மெண்ட் எழுதிவைத்தார் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தில் எனது மாமனாரோ, கணவரோ எந்தவிதத்திலும் உரிமை கொண்டாட முடியாது என்ற சொன்னால் சரியல்ல.

3. தாவா சொத்தை எனது கணவர் வா.த.சா.2 ஆவணத்தில் மூலம் தானம் கொடுத்துள்ளார். அந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். மேற்சொன்ன வா.த.சா.2 ஆவணம் எழுதிக்கொடுத்த தேதிக்கு முந்தைய காலத்தில் எனது கணவருக்கு சொத்து உரிமையாக இருந்தது என்பதை நிருபிக்கும் விதத்தில் ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எதுவும் இல்லை. தாவா சொத்திற்கு எனது கணவர் பெயரில் ஏதேனும் பட்டா, சிட்டா, அடங்கல் போன்ற ஆவணம் இருந்ததா என்றால் எதுவும் இல்லை. எனது மாமனார் முருகன் பெயரில் தாவா சொத்திற்கு பட்டா, சிட்டா, அடங்கல் போன்ற வருவாய் ஆவணம் இருந்ததா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஆதியில் தாவா சொத்து கண்ணனுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அந்த கண்ணன் யார்யாருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது.

4. எனது கணவர், எனது மாமனார் அனைவருமே வந்தவாசி நகராட்சியில் பணியாற்றக்கூடியவர் என்று சொன்னால் சரிதான். வந்தவாசி நகராட்சி, நகர நில

அளவு பதிவேட்டில் தாவா சொத்து சம்மந்தமாக எனது பெயரில் உள்ளது என்று சொன்னால் சரிதான். எந்த ஆவணத்தின் அடிப்படையில் நகராட்சியில் நில அளவை பதிவேட்டில் எங்கள் பெயர் சேர்க்கப்பட்டது என்றால் பட்டாவின் அடிப்படையில் சேர்க்கப்பட்டது. நகராட்சியில் நில அளவை பதிவேட்டில் எங்கள் பெயரை சேர்ப்பதற்காக கொடுக்கப்பட்ட பட்டாவில் இந்நீதிமன்றத்தில் ஒரு ஆவணமாக தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நகராட்சி நில அளவை பதிவேட்டில் எனது பெயரை சேர்ப்பதற்கு முன்பாக நகர நில அளவை அதிகாரிகள் வந்து பார்வையிட்டார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

5. நகர நில அளவை பதிவேட்டில் எந்த ஆவணங்களையும் குறிப்பாக வில்லங்க சான்று உட்பட பரிசீலிக்காமல் அந்த பதிவேட்டில் எனது பெயர் சேர்க்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் ஆதி உரிமையாளரான கண்ணன் கடந்த 06.10.1983ம் தேதியில் செய்த விற்கிரைய பத்திரத்தை நகர நில அளவு பதிவேட்டில் பரிசீலிக்கவில்லை என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. நகர நில அளவை பதிவேட்டு துறையினர் 2ம் பிரதிவாதி பெயரிலுள்ள கிரைய பத்திரம், 3ம் பிரதிவாதிக்கு 2ம் பிரதிவாதிக்கு எழுதிகொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் மற்றும் பட்டா, சிட்டா என வருவாய் ஆவணங்கள் எதையும் பார்க்காமல் எனது பெயர் நில அளவையர் பதிவேட்டில் சேர்க்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது கணவர் எழுதிக்கொடுத்த தான செண்டில்மெண்டை மட்டும் அடிப்படையாக வைத்து வா.த.சா.3 ஆவணம் நகர நில அளவையர் துறையில் கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது.

6. வா.த.சா.3 ஆவணம் எனக்கு எப்போது கொடுக்கப்பட்டது என்று சொன்னால் தேதி தற்போது ஞாபகமில்லை. நகர நில அளவு பதிவேட்டில் தாவா சொத்து எங்களுக்கு முன்பாக யார் பெயரில் இருந்தது என்பது பற்றி எனக்கு தெரியாது. வா.த.சா.3 ஆவணத்தில் நஞ்சை, புஞ்சை, நத்தம் என நிலத்தின் தன்மை பற்றி குறிப்பிட்டு காணப்படுகிறதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நகர எல்லைக்குள் நத்தம், வீட்டு மனைகள் மட்டுமே வரும் என்றாலும், நஞ்சை, புஞ்சை போன்ற நிலங்கள் நகராட்சிக்கு வராது என்றும், அவை வருவாய் துறையில் தான் வரும் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து புஞ்சை நிலம் என்று சொன்னாலும் அதற்கு நத்தம் பட்டா வழங்கமுடியாது என்று சொன்னாலும் அதுபற்றி எனக்கு தெரியாது.

**கற்றிந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**